**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 121/2002 |
| Prosecution Witness | : | **அ.சா.**16 |
| Name | : | **செல்வகுமாரி (காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றபிரிவு, பெரம்பலூர்)** |
| Husband Name | : | **வேல்முருகன்** |
| Address | : | **அரியலூர்** |
| Age | : | 45/2025 |

**தேதி : 19.11.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.G. லோகநாதன் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. 1வது எதிரி ஆஜர். 3வது எதிரிக்கு ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாவட்ட குற்றபிரிவு பெரம்பலூரில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இளையபெருமாள் என்பவர் இறந்துவிட்டார். நான் அவருக்காக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.05.2001ம் தேதி மாவட்ட குற்றபிரிவு அலுவலகத்தில் தலைமை காவலராக பணியாற்றிய திரு.பொன்னுசாமி என்பவர் பெரம்பலூர் நீதிமன்ற நடுவர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற புகாரினை பெற்று மாவட்ட குற்ற பிரிவு குற்ற எண். 14/2001 சட்டப்பிரிவுகள் 406, 420ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். என்னிடம் ் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை தலைமை காவலர் திரு. பொன்னுசாமி என்பவர் பதிவு செய்ததுதான். **அது அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் இளையபெருமாள் பார்வைக்கு வைத்தார்.

காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் ராஜாராமன், ஜெயசங்கர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.1வது எதிரி மணிவண்ணன் என்பவரை 29.05.2001ம் தேதி இரவு 8.00 மணிக்கு துறையூர் பெருமாள்மலை அடிவாரத்தில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் சாட்சிகள் ஜெயசந்திரன், பாண்டியன், ஆகியோர்கள் அடையாளம் காட்ட அவர்கள் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து எந்தவித ஆசை வார்த்தையும், அச்சுறுத்தலும் இன்றி அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பெயரில் எதிரி மணிவண்ணன் அவரது வீட்டில் இரவு 21.45 மணிக்கு சாட்சிகள் ஜெயசந்திரன், பாண்டியன் அவர்கள் முன்னிலையில் 11 ஆவணங்களை கைப்பற்றினார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் மற்ற இரண்டு எதிரிகள் நீதிமன்ற முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. பின்னர் சாட்சிகள் ரத்தினசாமி, கலியமூர்த்தி, ஜெகதீசன், பழனியாண்டி, பெரியண்ணன், பொன்னுசாமி, தங்கையன், சீனிவாசன், தேவராஜன், வஜ்ஜிரவேல் ஆகியோர்களை வெவ்வேறு தேதிகளில் விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது.

முதலாம் எதிரியை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்ததன் பேரில் 08.06.2001 அன்று காலை 9.00 மணிக்கு ஈச்சம்பட்டி, சஞ்சய்காந்தி தெருவில் உள்ள முதலாம் எதிரியின் வீட்டிலிருந்து சாட்சிகள் ரஜினி, குருசாமி ஆகியோர்கள் முன்னிலையில் 11 ஆணங்களை கைப்பற்றினார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான ரஜினி, குருசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். 29.05.2001ம் ்தேதி ஜெயசந்திரன், பாண்டியன் என்பவருக்கும் மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பொன்னுசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

ஆய்வாளர் 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றிய **குரு இன்டர் நேஷனல் சென்னை 17, நாள் 18.02.2000 தேதியிட்ட 2 லட்சத்திற்குரிய ரசீது நகல் அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**V.K. Films என்ற விலாசமுள்ள பேப்பரில் 07.12.1998 தேதியிட்ட ரூ.8 லட்சத்திற்குரிய பெற்றுக்கொண்டதற்கான ஒப்பந்த ரசீது அ.சா.ஆ– 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**V.K. Films என்ற விலாசம் என்ற பேப்பரில் 05.02.1999ல் தேதியிட்ட ரூ. 2 லட்சத்துக்கான ஒப்பந்த ரசீது தேதி 07.12.1998 அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**V.K. Filmsஎன்ற விலாசமுள்ள 16.08.1999 தேதியிட்ட பேப்பரில் ரு. 3 லட்சத்துக்கான ஒப்பந்த ரசீது தேதி 7.12.1998 அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**V.K. Filmsஎன்ற விலாசமுள்ள 06.1.2000 தேதியிட்ட ரு. 2 லட்சத்துக்கான ஒப்பந்த பத்திர ரசீது அ.சா.ஆ. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பத்திரம் எண். 7725, 7731, 7732, 7733, 7734 நாள் 15.04.1998 Power attorney பக்கங்கள் (1 முதல் 5 பக்கங்கள்) அ.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பத்திரம் எண். 34505 நாள் 07.12.1998 V.K. Filmsஎன்ற ஒப்பந்த பத்திரம் பக்கம் ( 1 முதல் 4 பக்கங்கள்) அ.சா.ஆ– 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**Xerox Copy பத்திரம் நகல் 12282–09.09.1999 Power of attorney pages 1 to 5 அ.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எம். கார்த்திக் என்ற விலாசமுள்ள 27.05.2000 தேதியிட்ட கால் சீட் நகல் V.V. கம்பைன்ஸ் சார்பாக குருதனபால் கையொப்பம் செய்தது பக்கம் 1 முதல் 3 அ.சா.ஆ. 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**17/P/148369 குடும்ப அட்டை நகல் இரண்டு, 1998–2003 மணிவண்ணன் குடும்பத்திற்குரியது அ.சா.ஆ. 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**அடையாள அட்டை, மணிவண்ணன் மெசஞ்சர் /FN–CM–ஆபிஸ், சென்னை –9 மணிவண்ணன் கையெழுத்துடன் கூடிய புகைப்படம் உள்ளது அ.சா.ஆ. 25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**Jet Airways India Limited மூலம் சென்னை – டெல்லி சென்றதற்கான இரண்டாம் எதிரியின் இரண்டு விமான டிக்கெட்டுக்கள் அ.சா.ஆ. 26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**Asst. Divisional Engineer Highway Rural Namakkal என்ற விலாசம் டைப் செய்யப்பட்ட கவர் ஒன்று அ.சா.ஆ. 27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**State Bank of Mysore T. நகர் பிரிவு சென்னை 17 என்ற வங்கியின் காசோலை ஒன்று, பணம், பெயர் எழுதாதது. இதில் For Guru Films international, power, attorney என்று கையெழுத்திடப்பட்டுள்ளது அ.சா.ஆ. 28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**புகைபடம் ஒன்று அதில் சினிமா நடிகர் சத்யராஜ் மற்றும் மூவர் உள்ளனர் அ.சா.ஆ. 29 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி மணிவண்ணன் மற்றும் சிலர் உள்ள புகைபடம் ஒன்று அ.சா.ஆ. 30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மணிவண்ணன் மற்றும் மூவர் உள்ள புகைபடம் ஒன்று அ.சா.ஆ. 31 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மணிவண்ணன் மற்றும் இருவர் உள்ள புகைப்படம் ஒன்று அ.சா.ஆ. 32 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குருதனபாலின் திருநாள் என்ற விலாசம் உள்ள விளம்பர நகல் ஒன்று அ.சா.ஆ. 33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குருதனபாலின் என் விழியில் நீ இருந்தால் என்று அச்சடிக்கப்பட்ட விளம்பரம் ஆயில் பிரிண்ட் பேப்பர் ஒன்று அ.சா.ஆ. 34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மணிவண்ணன், குருதனபால் மற்றும் உமாதேவி ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவுகள் 406, 420,

468,469, 471 மற்றும் 109 இதசவின்படி 12.02.2002ம் அன்று குற்ற இறுதி அறிக்கையை திரு.இளையபெருமாள் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்.

**<u>1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 01.05.2001 என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 17.05.2001 என்று சொன்னால் சரிதான். காலதாமதத்திற்கான காரணத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி மோசடி செய்ததாக சொல்லப்படும் பணம் அனைத்தும் வங்கி பரிவர்த்தனை மூலம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். நிகழ்நிலை புகார்ரதாரர் ராஜாராம் அவர்களின் உறவினர் மற்றும் நண்பர்கள் மட்டுமே சாட்சியாக இந்த வழக்கில் விசாரித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் ஆவணங்களின் அடிப்படையில் சொல்வது போல ஆஜர் 1ம் எதிரி எந்தவித பண மோசடியும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.